# சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும் (பாகம் - 11)

(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B)

***2வது குடியரசு அரசியலமைப்பின் 8வது திருத்தம்***

இது ஜனாதிபதி வழக்குரைஞர்கள் நியமனம் பற்றி கூறுகின்றது.
உறுப்புரை 33 இன் (இ) என்னும் பந்தியை உடனடுத்து (இஇ) என்னும் புதிய பந்தியாக 'உயர்தொழிலில் பிரபலம் அடைந்தவர்களாகவும் உயர்ந்த நடத்தையையும் நிதார்த்தத்தையும் பேணி வந்தவர்களான சட்டத்தரணிகளை ஜனாதிபதி வழக்குரைஞர்களாக்கும் போது அவர்கள் இராணி வழக்குரைஞர் அனுபவித்து வந்துள்ளதான அத்தகைய எல்லாச் சிறப்பு உரிமைகளுக்கும் உரித்துடையவர்களாக வேண்டும்' என்பதையும் உறுப்புரை 169திற்கு உடனடுத்து 169 ஏ என்னும் பந்தியை உட்புகுத்தி 'அரசியலமைப்பு வலுவுக்கு வர முன்னராக நியமிக்கப்பட்ட இராணி வழக்குரைஞர் ஒவ்வொருவரும் அத்துடன் அரசியலமைப்பு வலுவுக்கு வந்ததன் பின்னர் நியமிக்கப்பட்ட சிரேஸ்ட சட்டத்தரணி ஒவ்வொருவரும் இந்த உறுப்புரை வலுவுக்கு வரும் தேதியிலிருந்து ஜனாதிபதி வழக்குரைஞர் என அறிவிக்கப்படுவகாகவும் இராணி வழக்குரைஞர் அனுபவித்து வந்துள்ளதான அத்தகைய எல்லாச் சிறப்பு உரிமைகளுக்கும் உரித்துடையவராக வேண்டும்' என்பதையும் உறுப்புரை 136ன் திருத்தத்தின்படி சிரேஸ்ட சட்டத்தரணி என்ற ஒரு நியமனம் இல்லாதொழிக்கப்படுகின்றது என்பதாகவும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.
இத்திருத்தங்கள் 1984ம் ஆண்டு மார்ச் மாதம் 06ந் திகதி நிறைவேற்றப்பட்டன.

***அரசியலமைப்பின் 9வது திருத்தம்*** :

உறுப்புரை 91இல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்படாத அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தின் அளவை சரிசெய்தல் பற்றிக் கூறுகின்றது.
இத்திருத்தம் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ந் திகதி நிறைவேற்றப்பட்டது.

***அரசியலமைப்பின் 10வது திருத்தம்***

பொது மக்கள் பாதுகாப்பு என்ற அத்தியாயத்தில் 155ஆம் உறுப்புரையில் ஏற்கெனவே இருந்த (8) (9) ஆகிய இரண்டு பந்திகளையும் நீக்குவதாக திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் பொது மக்கள் பாதுகாப்பு நியதிச் சட்டத்தின் கீழ் ஒரு பிரகடனத்தை செய்வதற்கு தேவையான கால அவகாசத்தையும் பாராளுமன்றத்தின் 2/3 பெரும்பான்மை தேவை என்ற தேவைப்பாடும் நீக்கப்பட்டது.
இத்திருத்தம் 1986ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06ந் திகதி நிறைவேற்றப்பட்டது.

***அரசியலமைப்பின் 11வது திருத்தம்*** :

இந்தத் திருத்தச் சட்டத்தில் ஆறு வெவ்வேறு உறுப்புரைகள் திருத்தப்பட்டுள்ளன.

1. உறுப்புரை 111 திருத்தப்பட்டு மேல் நீதிமன்றங்களுக்கிருந்த குற்றவியல் சம்பந்தமான முதனிலை நியாயாதிக்கம் இல்லாது செய்யப்பட்டது.

2. உறுப்புரை 112 திருத்தப்பட்டு நீதிச் சேவை ஆணக்குழு நீதித்துறை பதவி வகிப்பவர்களுக்கும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களையும் சேர்ப்பதற்கான விதிகளை இயற்றக்கூடிய அதிகாரமளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. *(இந்த உறுப்புரை 17வது திருத்தச் சட்டத்தினால் இரத்துச் செய்யப்பட்டது)*

3. உறுப்புரை 113 ஏ என்னும் ஒரு உறுப்புரையை உட்புகுத்தி பிசுக்கால் என்ற ஒரு நியமனத்தை உருவாக்கி அவரே முழுத் தீவுக்குமான பிசுக்காலாகவும் முதனிலை நியாயாதிகாரம் கொண்டுள்ள சகல நீதிமன்றங்களிலுமுள்ள பிரதி பிசுக்கால்களையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும் மேற்பார்வை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. *(இந்த உறுப்புரை 17வது திருத்தச் சட்டத்தினால் இரத்துச் செய்யப்பட்டது)*

4. உறுப்புரை 114 திருத்தப்பட்டு நீதிச் சேவை ஆணக்குழுவின் செயலாளரின் இடமாற்றம் செய்யும் அதிகாரத்தை மட்டுப்படுத்தி அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களை மட்டும் இடமாற்றம் செய்யலாம் என்றும் பிசுக்கால் பதவியை அட்டவணைப்படுத்தப்பட்ட பகிரங்க அலுவலர்களாக சேர்க்க வேண்டும் எனவும் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. *(இந்த உறுப்புரை 17வது திருத்தச் சட்டத்தினால் இரத்துச் செய்யப்பட்டது)*

5. உறுப்புரை 146 திருத்தப்பட்டு அதிலுள்ள 2ம் பந்தியை நீக்கி அதற்குப் பதிலாக புதுப் பந்தியை புகுத்தியுள்ளது. இதனால் ஒவ்வொரு விசாரணை அமர்வுக்கான நீதிபதிகளின் எண்ணிக்கையையும் அவற்றை குறைப்பதிற்கான திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

146 (2) (1) (அ). தீதாய விளக்கம் சார்பாக குறைந்தது மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகளாலும்
(ஆ). ஏனைய தீர்ப்புகளும் கட்டளைகளும் குறைந்தது இரண்டு நீதிபதிகளினாலும் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.
(11). உறுப்புரை 144 இன் கீழான பாராளுமன்ற தேர்தல் ஆட்சேபனை மனுக்கள் தொடர்பான விளக்கம் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஒருவராலோ அல்லது பலராலோ (தலைவரையும் சேர்த்தோ) பிரயோகிக்கப்படலாம்.
(111). ஏனைய சகல கருமங்கள் தொடர்பான விளக்கங்களுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவரினால் பொதுவான அல்லது சிறப்பான கட்டளையின் மூலம் வேறு வகையில் பணித்தாலன்றி தனி நீதிபதியினால் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

6. இது அரசியலமைப்பின் அட்டவணை 5இல் செய்யப்பட்டுள்ள திருத்தம்.
5வது அட்டவணையில் பிசுக்கால் அலுவலர் என்பதை பிரதி பிசுக்கால் அலுவலர் என்பதாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
இத் திருத்தங்கள் 1987ம் ஆண்டு மே மாதம் 06ந் திகதி நிறைவேற்றப்பட்டிருந்தன.

***அரசியலமைப்பின் 12வது திருத்தம்*** இந்த திருத்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் கௌரவ தினேஸ் குணவர்தனவினால் 25.09.1987 அன்று சமர்ப்பிக்கப்பட்டபோது நிலையியற் கட்டளை 47 (5) இன்படி அமைச்சரவை அறிக்கை முற்போடப்படவில்லை என்பதால் மேல் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. திருத்தம் எதுவும் செய்யப்படவில்லை. பெயரளவிலான திருத்தம் மட்டுமே.

***கலகம் நிறைந்த காலம்***

1980ம் ஆண்டு தொடங்கி 1990ம் ஆண்டு வரையுமான காலத்தை இருண்ட காலம் அல்லது கலகக் காலம் எனக் கூறலாம். 1983 வரை அரசுக்கு தலையிடியாக இருந்துவந்த வடகிழக்கு இயக்கச்செயற்பாடுகள் அதன்பின்னர் அரசுக்கெதிரான மும்முரமானத் தாக்குதல்களாக மாறத் தொடங்கின. முன்னர் எழுச்சி பெற்று அடக்கப்பட்டிருந்த ஜே.வி.பி.யும் மீண்டும் 1987ல் பாரிய முறையில் வன்முறையை கட்டவிழ்த்தது. ஒரு அறிவித்தலை பகிரங்க இடங்களில் ஒட்டிவிடுவதன் மூலம் தென்னிலங்கையை ஸ்தம்பிதம் அடையச்செய்தது. கூறப்போனால் இலங்கை முழுவதுமாக துப்பாக்கி வேட்டும் கொலையும் ஆட்கடத்தலும் மனிதர்கள் டயர்களில் போடப்பட்டு எரியூட்டல்களும் வேறும் எழுத்தில் வடிக்க முடியாத பல அசுரத்தன சம்பவங்களும் நடந்தேறிவந்தன. கொழும்பில் கடையடைப்பு என்றால் தாகத்திற்கு ஒரு சொட்டு நீரும் கிடைக்காது. பசிக்கு ஒரு துண்டு பாண் கூட கிடைக்கமாட்டாது. இந்த நிலைமைக்கு மேலும் நாட்டில் வன்முறைகளையும் கொலைகளையும் அதிகரிக்கும் செயற்பாடாக அமைதி காக்கும் படையாக இலங்கைக்கு ஆடி 1987இல் வந்திருந்த இந்தியப் படையணியினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே வந்த சில மாதங்களுக்குள்ளாகவே சண்டையும் மூண்டது. இந்தக் காலகட்டத்தில் ஜனாதிபதியாக ஜே.ஆர் ஜெயவர்தனவும் பிரதம அமைச்சராக பணியாற்றி வந்தவர் ரணசிங்க பிரேமதாசவும் ஆவார்கள்.

***ஒப்பரேஷன் பூமாலை***

இந்த அவலங்களுக்குள் 1987 இன் ஆரம்பத்தில் வடமராட்சியில் அரசு தாக்குதலை சற்றுக் கடுமையாக்கியது. மக்கள் வீடுகளில் இருக்க முடியாமல் அங்குமிங்குமாக அலைய வேண்டிய நிலைமையானது. நாளுக்குநாள் சுற்றிவளைப்புக்களும் புலிகளைத் தேடும் வேட்டைகளும் கடுமையாக்கப்பட்டன. இக்கடுமையான இராணுவ முஸ்தீபை மனித உரிமை அமைப்புக்களும் சில நாடுகளும் கண்டித்தன. அதில் இந்தியாவும் ஒன்று. 1987ம் ஆண்டு ஜூன் மாதம் 4ந் திகதி இந்திய வான்படை விமானம் ஒன்று இலங்கை வான் பரப்புக்குள் அத்துமீறி வந்து உணவுப் பொட்டலங்களைப் போட்டது. இது இலங்கை அரசுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. இந்த நகர்வை ஒபரேஷன் பூமாலை என்றும் ஈகில் மிஸன் 4 எனவும் இந்தியா பெயரிட்டிருந்தது. இந்தியாவுடன் இலங்கை தொடர்பு கொண்டபோது ஒரு சமாதானத் தீர்வு மூலம் பிரச்சினைக்கு முடிவொன்றைத் தேடுமாறு இந்தியா இலங்கையை கேட்டுக்கொண்டது. இது இவ்வாறு இருக்க புலிகள் அமைப்பின் செயற்பாடுகளும் தீவிரமடைந்தன.

*முதலாவது தற்கொலைக் குண்டுதாரி*

இராணுவத்தின் படைகள் வடமராட்சியில் குவிக்கப்பட்டிருந்தன. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் அரச படைகளின் கூடாரமாகியது. இந்த நேரத்திலேதான்

எவரும் எதிர்பார்த்திராத நிகழ்வு ஒன்று நடந்தேறியது. முழுதாக வெடிப் பொருட்களை ஏற்றிக் கொண்ட புலிகளின் டிராக் வாகனம் ஒன்று பயங்கர வேகத்தில் மகா வித்தியால நுளைவாசலூடாக உட்பிரவேசித்தது. தாக்குதலுக்கான முனைப்பு என்பதைக் அறிந்து கொண்ட இராணுவம் சற்றும் சுணங்காது விரைந்து செயற்பட்டு துப்பாக்கிகளால் சரமாரியாகப் வாகனத்தையும் அதன் சாரதியையும் நோக்கிச் சுட்டுத் தள்ளினார்கள். சுடப்பட்டதில் வாகனச்சாரதி அக்கணமே உயிரிழந்தார். ஆனால் வாகனமோ நில்லாது இலக்கை அடைந்து மேல்மாடி கொண்ட அக்கல்விக்கூடத்தை தாக்கி மோதி பயங்கரச் சத்தத்தோடு வெடித்துச் சிதறியது. அவ்விடத்தில் ஒரு பாரிய பள்ளத்தை உருவாக்கியிருந்தது. ஒபரேஷன் லிபரேஷன் என்ற அரசின் பாரிய தாக்குலை முறியடிக்கவே 1987ம் ஆண்டு ஆடி மாதம் 05ந் திகதி இந்த முதலாவது தற்கொலைக் குண்டுத் தாக்குதலை புலிகள் அமைப்பு திட்டமிட்டது. புலிகளின் செயற்கைப் பெயராக மில்லர் என்ற வல்லிபுரம் வசந்தன் என்பவரே சாரதியாக துணிவுடன் செயற்பட்ட 21 வயது இளைஞராவார். தற்கொலைக் குண்டுதாரியின் வாகனத்தைப் பின்தொடர்ந்து வந்த புலிகளின் அணிகள் சரமாரியாக இராணுவத்தினரை சுட்டுத் தள்ளி அந்த தளத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். பல நுற்றுக்கணக்கான இராணுவ வீரர்கள் இறந்தும் படுகாமடைந்தும் அங்கவீனர்களளாகவும் ஆக்கப்பட்ட நிலைமை இலங்கை அரசைச் சிந்திக்கவைத்தது. இதன் விளைவு ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பரவலாக்கல் மூலமாக ஒரு மாகாண சபை அமைப்புக்கு அடிகோலப்பட்டது.

(தொடரும்)